# விடுதலையின் நற்செய்தி



# விடுதலையின் நற்செய்தி!

''அனைவருக்கும் பேரானந்தம் தரும் நல்ல செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்!''

ஏறத்தாழ 2000 ஆண்டுகட்கு முன்னர் ஆசியாக் கண்டத்திலுள்ள பாலஸ்தீன நாட்டில் இயேசு கிறிஸ்துவின் பிறப்பை இப்படித்தான் இறைவனது தூதன் ஒருவன் அறிவித்தான். உங்களுக்காகவும் எனக்காகவுமே கிறிஸ்து இவ்வுலகில் உதித்தார் என்பது பேரானந்தம் தரும் செய்திதானே? பாவிகளாகிய நம்மை மீட்கவே அவர் வந்தார்.

நாம் எல்லாரும் பாவம் செய்திருக்கிறோம். பாவத்தின் விளைவுதான் மரணம். அதாவது இறைவனை விட்டு என்றென்றும் பிரிக்கப்பட்டு நரகத்தில் தள்ளப்படுவதாகும். ஆனால் இறைவன் அன்புள்ளவர். எவரும் இவ்விதம் அழிந்துபோவது அவரது விருப்பமில்லை. நம் மீதுள்ள அளவு கடந்த அன்பினால் தமது ஒரே மகனாகிய இயேசுவைப் பாவம் நிறைந்த இவ்வுலகிற்குள் அனுப்பினார். இயேசுவை நம்பினால் நமக்கு அழிவில்லை, நித்திய வாழ்வுண்டு.

இயேசுவானவர் இவ்வுலகில் 33½ ஆண்டுகள் மனிதனாகவே வாழ்ந்தார். நம்மைப்போல் வாழ்வின் எல்லாப் பகுதிகளிலும் அவருக்குச் சோதனைகள் வந்தன. ஆனால் ஒரு சோதனைக்கும் அவர் அடிபணியவில்லை. பாவமே செய்யாதவர் அவர் ஒருவரே. காரணம் மனுவுருவில் இருந்த அவர் இறைவனல்லவா? எங்கும் சென்று மனிதருக்கு நற்பணியாற்றினார். பாவிகளை மன்னித்தார். நோயாளிகளை ஆரோக்கியமாக்கினார். இறந்துபோன சிலரை எழுப்பியும் விட்டார். இயற்கை மீது அவருக்கு முழு அதிகாரம் இருந்தது. பேய் பிடித்திருந்தவர்களை விடுவித்தார். அவரால் முடியாதது என்று ஒன்றுமே இல்லை. இறைவனுக்கு முடியாதது எது?

இயேசுவின் எதிரிகளோ பொறாமை கொண்டு அவரைச் சிலுவையில் ஆணியறைந்தனர். ஆனாலும் அதுதான் இறைவனது திட்டமாயிருந்தது. அவரது மரணமே அனைத்துலகத்தின் பாவங்களுக்கும் இணையற்ற பலியாகும். பாவமற்ற, குற்றமற்ற, புனிதமான அவரது இரத்தமே நமக்குப் பாவ மன்னிப்பும் மீட்பும் அருளுகிறது. அவர் நமது நோய்களையும் தமது உடலில் சுமந்து தீர்த்துவிட்டார். பறவைகள், மிருகங்களின் இரத்தமோ, மார்க்கச் சடங்குகளோ நமது

பாவங்களைப் போக்க முடியாது. நம்மைக் கழுவுவது இயேசுவின் இரத்தம் ஒன்றே!

இயேசுவானவர் அப்படியே மண்ணில் மறைந்துபோகவில்லை. மரணம் அவரைப் பிடித்து வைத்திருக்க முடியவில்லை. அவர் மன்னாதி மன்னரும், கர்த்தாதி கர்த்தாவுமாயிருக்கிறபடியால் சாத்தானைத் தோற்கடித்து மூன்றாம் நாள் உயிரோடு எழுந்தார். உயிரோடிருக்கிறவராகத் தமது சீடருக்கு நாற்பது நாட்கள் காட்சி கொடுத்தார். பின்னர் விண்ணகத்திற்குத் திரும்பச் சென்றார். உயிரோடெழுந்த கிறிஸ்து மாறாதவர். நம்மை ஆசீர்வதிக்க அவரது வல்லமை அப்படியே குறையாது இருக்கிறது!

இயேசு கிறிஸ்து ஒரு கற்பனைப் பாத்திரம் அல்ல. அவர் சரித்திரத்தின் நடுநாயகர். அவரில்லாது சரித்திரத்தை விளங்கிக்கொள்ள முடியாது. கி.மு., கி.பி. எனச் சரித்திரத்தை அவர் இரண்டாகப் பிரித்துள்ளார். இயேசுவின் மூலம் இரட்சிப்பு எனும் இந்த நற்செய்தியை அறிவிக்க கி.பி. 40இல் அவரது சீடரில் ஒருவராகிய தோமா என்பவர் இந்தியாவிற்கு வந்தார். அவரது பணியை எதிர்த்தவர்களால் சென்னைக்கருகில் அவர் கொலை செய்யப்பட்டார்.

நாம் எந்த இனத்தையும் மதத்தையும் சேர்ந்தவராயினும் கிறிஸ்துவின் அழைப்பு நம்மெல்லாருக்கும் உண்டு. ''வருந்தி மடிவோரே, அனைவரும் என்னிடம் வாருங்கள். நான் உங்களுக்கு நிம்மதியும் அமைதியும் தருவேன்'' என்று இயேசு அழைக்கிறார்! பாவ மன்னிப்பு பெற வேறு வழியில்லை. ''நானே வழி'' என்றார் இயேசு. பல வழிகளில் அவரும் ஒரு வழி என்றல்ல; அவர் ஒருவரே வழி! மனிதனை மீட்க இறைவன் ஏற்படுத்திய ஒரே மார்க்கம் கிறிஸ்துவே!

பைபிள் என்பது இறைவனது வார்த்தை. சரியென மனிதனுக்குத் தோன்றும் வழிகளுண்டு. அவைகளின் முடிவோ அழிவுதான் என்று இந்நூல் கூறுகிறது. விபச்சாரம், பில்லிசூனியம், பகை, சண்டை, பொறாமை, குடிவெறி போன்றவையெல்லாம் இறைவனுக்கு எதிரான பாவங்களாம். இவை நம்மை நரகத்திற்குத்தான் நடத்திச் செல்லும். அவைகளை விட்டுவிட்டு இயேசுவிடம் வாருங்கள். அவர் உங்களை மன்னிப்பார். நோயுற்ற உங்கள் உடலையும் ஆரோக்கியமாக்குவார். அவர் சர்வ வல்லவர்.

இவ்வுலகிற்குத் திரும்ப வருவதாக இயேசு சொல்லியுள்ளார். யுத்தங்கள், பஞ்சங்கள், பூமியதிர்வுகள், இதுபோன்ற யாவும் அவர்

முன்னறிவித்தபடியே நடக்கின்றன. பைபிளில் உள்ள முன்னறிவிப்புகள் யாவும் பிழையின்றித் துல்லியமாய் நிறைவேறி வருகின்றன. 2000 ஆண்டுகளுக்கு முன் இயேசு முதல் முறை வரும்போது இரட்சிக்கிறவராய் வந்தார். அடுத்த முறை வரும்போது நியாயம் தீர்க்கிறவராய் வருவார். இன்று அவரை ***"இரட்சகராய்"*** ஏற்றுக்கொள்ள மறுப்போர் நாளை அவரை ***"நீதிபதியாய்ச்"*** சந்திக்கவேண்டும். தீர்மானம் உங்களுடையது!

வாழ்வு குறுகியது. எப்பொழுது இறப்போம் என்று யாருக்குத் தெரியும்? நாளை நமதல்ல. இன்றே இரட்சிப்பின் நாள். உங்களது நித்திய முடிவை இன்றே தீர்மானியுங்கள். இன்று பாவ மன்னிப்பைப் பெற்று மகிழ்வதற்கும், நாளை விண்ணுலகில் என்றென்றும் வாழ்வதற்கும் நிகர் ஏதுமுண்டோ?

நண்பரே, இது ஒரு மதப் பிரச்சாரமல்ல. சொல்லப்போனால், எம்மதமும் நம்மை இரட்சிக்க முடியாது. கிறிஸ்தவ மதமும் நம்மை இரட்சிக்க முடியாது. கிறிஸ்துவாகிய இறைமகனே நம்மை இரட்சிக்க முடியும்! அவர் ஒருவரே நம்மை மன்னிக்க முடியும்! அவர் ஒருவரே நமது ஆன்மாவை மீட்க முடியும்! இந்த ஆசீர்வாதம் உங்களுக்கு வேண்டுமா? வேண்டுமானால் கீழ்க்கண்டவாறு நம்பிக்கையோடு பிரார்த்தனை செய்யுங்கள் —

> *"இறைவா, நான் ஒரு பாவி. என்மேல் இரக்கமாயிரும்! எனக்காக இறக்கும்படி இயேசு கிறிஸ்துவை அனுப்பியதற்காக உமக்கு நன்றி. எனது சொந்த இரட்சகரென அவரை நம்புகிறேன். எனது ஆண்டவரென அவரை ஏற்றுக்கொள்ளுகிறேன். எனது பாவங்களை மன்னித்து என்னை உமது பிள்ளையாக மாற்றிவிட்டதற்காக நன்றி. இயேசுவின் பெயரால் அப்படியே ஆகட்டும்!"*

தமது மகிழ்ச்சியினாலும் சமாதானத்தினாலும் இறைவன் உங்களை ஆசீர்வதிப்பார்! இயேசுவைப்பற்றி இன்னும் அறிய விரும்பினால் எங்களுக்கு எழுதுங்கள்.


**சிட்டி ரிவைவல் ஏ.ஜி. சர்ச்**

ஜென்னி பிளாசா
5, பாரதியார் சாலை
கண்டோன்மென்ட், திருச்சி–1.
9443415484
www. cityrevivalagchurch.org